

# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் கர்த்தர் செய்த அற்புதங்கள்

## கணவன் மனைவிக்கு இருந்த சிறுநீரகக் கற்கள் ஜெபித்த மறுநாளே காணாமல் போய்விட்டது!



நானும் என் மனைவியும் சிறுநீரக தொற்றினால் மிகவும் கஷ்டப்பட்டோம். சிறுநீரில் இரத்தம் கலந்து வரும். **மருத்துவர்கள் பரிசோதனை செய்த பொழுது எங்கள் இருவருக்கும் கல் இருப்பதாக கண்டுபிடித்தார்கள்.** இதை அறுவை சிகிச்சை மூலம் தான் எடுக்க முடியும். ஏனென்றால் கல் மிகப்பெரியதாக இருந்தது. இதனிமித்தம் நாங்கள் மிகவும் வேதனையடைந்தோம். இந்நிலையில் துநி என்னும் பகுதியிலுள்ள **எனது நண்பர் திரு.கிரண்** அவர்கள் மூலம் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமையை கூறினோம். சகோதரர் மிகவும் கரிசனையோடு எங்களுக்காக ஜெபித்து **"கத்தி உங்கள் சரீரத்தின் மீதுபடுவதில்லை, சர்வ வல்ல தேவன் அற்புத சுகத்தை தருவார்"** என்று கூறினார்கள். அதன்பிறகு அல்ட்ரா சவுண்ட ஸ்கேன் எடுக்கலாம் என மருத்துவரின் ஆலோசனைபடி எடுப்பதற்கு போகும்பொழுது **எங்கள் இருவருக்குள்ளும் ஒரு தெய்வீக வல்லமை இறங்கியது. ஸ்கேன் எடுத்தபொழுது எங்கள் இருவருக்கும் இருந்த சிறுநீரகக் கற்கள் ஒன்று கூட இல்லாமல் கர்த்தரால் நீக்கப்பட்டது. மருத்துவர்கள் "நீங்கள் நார்மலாகி விட்டீர்கள். இனி அறுவை சிகிச்சை தேவையில்லை"** என்று சொல்லிவிட்டனர். நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கர்த்தர் செய்த அற்புதத்திற்காக பொருத்தனை செய்தபடி தொலைக்காட்சி ஊழியங்களை தாங்குகிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- சகோ. கிரண், மொத்துகூடம், ஆந்திரா**

## கொரோனாவிலிருந்து அற்புத சுகம்

கொரோனோ தொற்று ஏற்பட்டு மிகவும் பாதிக்கப்பட்டேன். மருத்துவர்கள் ஆலோசனைப்படி என்னை தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை எடுத்தேன். எனினும் அதிகமான தொந்தரவுகள் ஏற்பட்டது. இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு எனது சுகத்திற்காக ஜெபித்துக் கொண்டேன். சுகம் தந்தால் ஊழியத்தை தாங்குவதாக பொருத்தனை செய்தேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு எனக்கு அற்புத சுகத்தை தந்தார். பொருத்தனை செய்தபடி எனது காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகின்றேன்.

**- Sis. ஜெனிபர், மதுரை**

## மூச்சு திணறலிலிருந்து அற்புத சுகம் தந்த தேவன்



எனது குழந்தையின் பெயர் லூக்கா, இரண்டு வயதாகிறது. அவனுக்கு சளிபிடித்தால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்படுவான். அவனை பார்க்கும்பொழுது எங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். மருத்துவர்கள் அவனுக்கு மிக Strong Dose மருந்துகளை கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருந்தது. இதனால் பக்கவிளைவுகள் ஏதும் குழந்தைக்கு ஏற்பட்டுவிடுமோ என்று கலங்கினோம். இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள எனது தந்தைக்கு தொலைப்பேசி மூலம் குழந்தை மூச்சுத் திணறலால் மிகவும் கஷ்டப்படுவதை தெரிவித்தேன். அந்த நேரம் குழந்தைக்கு மிகவும் மூச்சு திணறல் இருந்தது. அப்பா அன்பரின் ஊழியத்தின் பங்காளர். அவர் உடனடியாக Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்களை தொடர்பு கொண்டு குழந்தையின் நிலையை தெரிவித்து ஜெபிக்ககேட்டார். சகோதரர் குழந்தைக்காக மிகவும் கண்ணீருடன் ஜெபித்து **"கர்த்தர் குழந்தைக்கு மூச்சு திணறலை நீக்குவார், இனி இந்த தொந்தரவு குழந்தைக்கு வராது"** என்று கூறினார்கள். அந்த நிமிடமே குழந்தைக்கு இருந்த மூச்சுதிணறல் சுகமானது. அதன் பிறகு ஒருமுறை பரிசோதனை செய்து பார்த்தோம். ஜெபத்திற்கு பிறகு குழந்தைக்கு மூச்சு திணறல் வருவதே இல்லை. அற்புத சுகம் தந்த தேவனை துதிக்கின்றோம்.

**- சகோ. ஜார்ஜ் எஸ்லி, ஜெர்மனி**




## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
## (Renovation)
## புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

# அன்பரின் ஊழியம்

மலர்: 7 ◆ ஜூலை 2021 ◆ இதழ் 7



## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

மாபெரும் வைத்தியரும், நம்மை உருவாக்கின வருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் - நாகூம் 1: 7 சங்கீதம் 91: 9,10, 14-16: யாத். 23:25: உபாகமம் 7 : 15

நாம் சற்றும் எதிர்பாராதபடி இந்த கொள்ளை நோயாகிய கொரோனா மிக வேகமாக பரவி ஆயிரக்கணக்கான மக்களை கொள்ளை கொண்டு போகின்றது. யாருக்கு எப்பொழுது ஜீவன் போகும் என்பதே அறியாத வண்ணம் இந்த தொற்று நோய் வாலிபர்களையும், சிறு பிள்ளைகளையும், வயதானவர்களையும் ஒரு மரண காற்றைப் போல சில நாட்களுக்குள் அவர்களை சாகடிப்பதை கண்கூடாக காண்கிறோம். எனினும், கர்த்தருடைய வார்த்தையும், வாக்குத்தத்தங்களும் மாறாதவை. நாம் மேற்கூறிய வசனங்களை தேவனுடைய வாக்காக நம்பி அதை அங்கீகரிக்கும் பொழுது நிச்சயமாகவே கர்த்தர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் கொடிய கொரோனாவிலிருந்து கட்டாயம் தப்புவிப்பார். ஏனெனில், எகிப்தினுடைய பாவத்தின் நிமித்தம், கொடூரத்தின் நிமித்தம் வாதைகள் அங்கு வந்து அவர்களில் சிறு பிள்ளைகளும், பெரியோர், சிறியோர் யாவரும் அழிக்கப்பட்டனர். ஆனால், அடிமைகளாக கொடுமைப்படுத்தப்பட்ட இஸ்ரேல் ஜனங்களில் ஒருவர் கூட வாதையால் சாகவில்லை. காரணம் கர்த்தர் அவர்களுக்கு அரணாக இருந்து பாதுகாத்தார். சுகமளிக்கும் ஔஷதம் கர்த்தருடைய செட்டை களிலிருந்து தினமும் அவரை நம்பினவர்கள் மீது விழுந்தது. (மல்கியா 4:2) இஸ்ரேல் ஜனங்கள் ஒருவரையும் வாதையோ, பசி, பட்டினியோ அணுகவில்லை. அவர்கள் வஸ்திரமும் பழையதாக போகவில்லை, செருப்பும் கிழியாமல் இருந்தது. (உபாகமம் 8:4) பறந்து காக்கும் பட்சிகளை போல அவர்களை எல்லா வேதனைகளிலிருந்தும் பத்திரமாய் பாதுகாத்தார். (ஏசாயா 31:5) எனவே கண்ணீர் வடிக்கிற, பயத்தில் இருக்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் நிச்சயமாக பாதுகாப்பார். ஏனென்றால் அவரே ஜீவாதிபதி! (அப்போஸ்தலர் 3:15).

இந்த நாற்பது வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உன் கால் வீங்கவும் இல்லை உபாகமம் 8: 4

... நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் - யோவான் 11 : 25

கடந்த மாதத்திலும் நாம் வெளியே சென்று பிரசங்கம் செய்ய முடியாவிட்டாலும் கர்த்தருடைய

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/-. ஆயுள் சந்தா ரூ.2,000/-.

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1,500/-. ஆயுள் சந்தா ரூ.15,000/-.

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: (0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605 (24 மணி நேரமும்)

Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205

e-mail: info@mojindia.org website: www.mojworld.org & www.ministryofjesus.in

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

பெரிதான கிருபையினால் தொலைக்காட்சி ஊழியங்கள், யூட்யூப் லைவ் (YouTube Live) நிகழ்ச்சிகள் மற்றும் Zoom Meeting மூலமாக அநேக மக்களை சந்தித்தோம். தினமும் நம்மிடத்தில் வருகிற நூற்றுக்கணக்கான ஜெப விண்ணப்பங்களை பொறுமையோடு படித்து அவர்களுக்காக ஜெபம் செய்தோம். அற்புதங்களை பெற்ற அநேகர் தங்கள் நன்றிகளை, ஸ்தோத்திரங்களை தேவனுக்கு செலுத்தி, எங்களுக்கும் விவரங்களை தெரிவித்தனர்.

இந்த கொரோனா காலத்திலும் கர்த்தரையே சார்ந்து அவர் மனதுருக்கத்தையும், கிருபையையும் நம்பி தொடர்ந்து ஊழியங்களை செய்து கொண்டிருக்கிறோம். ஊழியத்தை கர்த்தர் அற்புதமாய் நடத்தும்படி ஊக்கமாய் ஜெபிப்போம். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் தெலுங்கு மொழியில் இன்னொரு சேனலான ஆராதனாவில் நமது நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது. ஆக மொத்தம் மூன்று நிகழ்ச்சிகள் தெலுங்கு சேனல்களில் ஒளிபரப்பாகிறது. நம்பிக்கை தொலைக்காட்சியிலும் நம்முடைய நிகழ்ச்சிகளை நீங்கள் காணலாம். அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். இன்னும் தொலைக்காட்சி ஊழியங்கள் அதிகரிக்கப்பட ஜெபியுங்கள்.

நமது S.J.Saves Trust மூலம் இதுவரை மூவாயிரத்தி ஐநூறு (3500) சிறுமையும், எளிமையுமான பிள்ளைகளுக்கும், 2000 வயதான விதவைகளுக்கும் பல முதலுதவி மருந்துகள் கொடுத்தபடியால் அனைவருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகி பலவித நோய்களுக்கு தப்புவிக்கப் பட்டுள்ளனர். கர்த்தருக்கு சித்தமானால் வருகின்ற நாளில் சுமார் பத்தாயிரம் (10000) ஏழை பிள்ளைகளுக்கும், ஐந்தாயிரம் (5000) ஒதுக்கப்பட்ட வயதான விதவைகளுக்கும் உதவி செய்து இந்த கொரோனாவிலிருந்து காப்பாற்ற வேண்டும். கர்த்தர் உங்கள் மனதில் ஏவினால் இந்த நல்ல காரியத்திற்காக உதவி செய்யுங்கள்.

நமது தமிழ்நாட்டில் புதிய அரசாங்கம் உருவாகி இருக்கிறது. கர்த்தர் தாமே அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு தீர்க்காயுசையும், ஞானத்தையும், கிருபைகளையும் கொடுத்து நீதியும் நேர்மையுமாய் எல்லா ஜனங்களையும் அன்புடன் நடத்துமாறு ஊக்கமாய் ஜெபிப்போம். வீட்டில் இரண்டு மாதமாக வேலையின்றி இருக்கிற நீங்கள் காலத்தை வீணாக்காமல் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். பரிசுத்த வேதத்தை ஆராய்ந்து படியுங்கள் (யோவான் 5:39). மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை மறந்துவிடாதீர்கள் (லூக்கா 4:4; உபாகமம் 8:3).

அன்பு சகோதர, சகோதரிகளே! கொள்ளை நோயினால் (கொரோனா) ஒருவேளை சிலர் தங்களுக்கு அன்பானவர்களை இழந்திருக்கலாம். எனினும் மனங்கலங்காதீர்கள்! கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது (சங்கீதம் 116:15). கர்த்தர் தாமே உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை எல்லா இக்கட்டுகளுக்கும், கொள்ளை நோய்களுக்கும், கடன் பாரங்களுக்கும் நீங்கலாக்கி விடுவிப்பாராக! ஆமென்!

ஊழியத்திற்காக ஜெபிக்க விரும்புவோர் அல்லது இங்கு வந்து ஜெபிக்க விரும்புவோர் எங்களை தொடர்புகொள்ளுங்கள். அப்படி விரும்புவோர் கண்டிப்பாக உங்கள் குடும்பத்தினரின் அனுமதி மற்றும் ஒத்துழைப்போடு தான் வர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். இக்கட்டான இந்த சூழ்நிலைகளில் தேவன் உங்கள் தேவைகளை சந்தித்து, எல்லா பயங்களையும் நீக்கி, பாதுகாத்து உங்களை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

மே மாதம் 10ம் தேதி முதல் தமிழ்நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தபடியால் ஜூன் மாத அன்பரின் ஊழியப் பத்திரிக்கையை தயார் செய்ய இயலவில்லை. எனினும் சமூக வலைதளங்களில் நமது தேவ செய்திகள், ஜெபங்கள் மற்றும் சாட்சிகளை பார்த்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம். குறிப்பாக ஒவ்வொரு வாரமும் Zoom செயலி மூலம் ஒளிபரப்பபட்ட நிகழ்ச்சியில் அநேக மக்கள் தேவ செய்தியை கேட்டார்கள். அதில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்களில் நேரடியாக ஜெபிப்பது போல ஒவ்வொருவரும் தங்கள் ஜெப விண்ணப்பங்களை சொல்லி எனது தந்தை மற்றும் தாயாரிடம் ஜெபித்துக் கொண்டார்கள். அதற்காக தேவனை துதிக்கின்றோம். வரும் நாட்களில் இன்னும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை விரிவுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இதற்காக உங்கள் ஜெபங்களில் ஜெபியுங்கள்.

எனது மகன் ஜோனத்தன் யூட்யூப் சேனலில் புதிய பாடல் வீடியோ வெளியிட்டுள்ளார். தவறாமல் அதை பாருங்கள், அநேகருக்கு அந்த பாடலை அறிமுகப்படுத்துங்கள். விரைவில் எனது தாய் திருமதி.மார்கிரேட் ஸ்திரா அவர்களின் பாடலும் வெளியிட உள்ளோம்.

நம்முடைய பத்திரிக்கை e-magazine வடிவில் வலைதளத்திலும் உண்டு. உங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுக்கு சொல்லி அதை படித்து அறிந்துகொள்ள சொல்லுங்கள். தேவன் தாமே உங்கள் அனைவரோடுங்கூட இருந்து ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

**இம்மாத வாக்குத்தத்தம்**

**சங்கீதம் 31:15**
**2 நாளாகமம் 14:11**
**லூக்கா 24:47-51**

# இதயம் தொட்ட எண்ணம்

***ஆண்டவராகிய இயேசுவே இன்றும் என் நம்பிக்கை, ஏனெனில் அவரே இன்றும் ஆளுகை செய்கிறார்.***

**My hope is still in the Lord Jesus**
**Because He is still in control**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. 10848469699 | Account No. 10848559426 | Account No. 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code - ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.



# நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன். தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன் ... சங்கீதம் 56:3,4

பலவிதமான கட்டுப்பாடுகள் உள்ள ஊரடங்கு காலத்திலும், பயங்கரமான கொரோனா காலத்திலும் கர்த்தர் தாமே தம்முடைய இணையற்ற பிரசன்னத்தால் நிரப்பி, எவ்வித தீமையும் உங்களை அணுகாமல் பாதுகாத்து அற்புதமாக நடத்துவாராக. ஆன்லைன் வகுப்பு மற்றும் ஆன்லைனில் வேலை செய்கின்ற அனைவரும் இந்த ஊரடங்கின் காலத்தில் வேத வசனங்களை மனப்பாடம் செய்வதில் நேரத்தை செலவழித்தால் அது எவ்வளவு ஆசீர்வாதமாய் இருக்கும். பிரியமானவர்களே! தேவனுடைய தாசனாகிய தாவீதின் வாழ்க்கையை நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கும்போது அவன் எண்ணி முடியாத சத்துருக்களால் பல வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டதை நாம் பார்க்கிறோம். அவன் 17 ஆண்டுகள் காடுகளிலும், மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் சுற்றி திரிந்தான். சவுல் ராஜாவினுடைய கொடுமைகளும், கொலை வெறியும் அவனை நாள்தோறும் பயமுறுத்தியது. இருந்தாலும் அவன் உன்னதமான தேவனை தன் அடைக்கலமாக கொண்டு எப்போதும் அவரை பாடியும், துதித்தும் அவருடைய கற்பனைகளில் பிரியமாய் இருந்து தன் வாழ்க்கையை நடத்தினபடியால் எல்லாவற்றையும் ஜெயிக்க தேவன் அவனுக்கு வல்லமையை கொடுத்தார்.

எல்லா ஜாதியாரும் என்னை வளைந்து கொள்ளுகிறார்கள்; கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.

என்னைச் சுற்றிலும் வளைந்து கொள்ளு கிறார்கள்; கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன் - சங்கீதம் 118: 10,11

நிமித்தமில்லாமல் என்னைப் பகைக் கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக் கிறார்கள்; வீணாக எனக்குச் சத்துருக்களாகி என்னைச் சங்கரிக்க வேண்டுமென்றிருக்கிறவர்கள் பலத்திருக்கிறார்கள்; சங்கீதம் 69: 4

பலவிதமான பெலவீனங்கள், வியாதிகள், சூழ்ச்சிகள், நன்மைக்குத் தீமை தாவீதை அனுதினமும் நெருக்கத்தான் செய்தது. இவை எல்லாவற்றின் மத்தியிலும் தேவனை பற்றி குறை சொல்லாமல் அதற்கு மாறாக அவரை புகழ்ந்து பாடி அவருடைய கற்பனைகள் மீது அளவற்ற மகிழ்ச்சியை கொண்டு அவருக்கு பிரியமாக தன் வாழ்க்கையை நடத்தினான். அதனிமித்தம் மகா இரக்கமுள்ள தேவன் அவன் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்து அவனை மிகப்பெரிய ராஜாவாக உயர்த்தினார். தன்னுடைய கஷ்டமான நேரத்தில் கர்த்தரால் தயவு பெற்றபொழுது மேலே கொடுக்கப்பட்ட வார்த்தைகளை தாவீது சொல்கிறான்.

ஆம் எனக்கன்பானவர்களே! நாம் வாழும் இந்த பூமியில் நன்மையை பார்க்கிலும் தீமையே பெருகிக் கொண்டிருக்கிறது. அநீதியான கொலைகள், கொஞ்சம் கூட தேவ பயம் இல்லாதபடி சிறு வயது முதல் இளம் வயது வரைக்கும் கபடு சூது இல்லாத பிள்ளைகளை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்வதையும், சோதோம் கொமோரோவின் அக்கிரமங்கள் போல தேவனுக்கு விரோதமான செயல்கள் பெருகுவதையும் நாம் பார்க்கிறோம் (ஏசாயா 1:4). உண்மையான தேவ பயம் மிக, மிக கொஞ்ச பேரிடத்தில் மாத்திரமே இருக்கிறது. இதனிமித்தமாக ஒருபுறம் மரணத்தை உருவாக்குகிற சாத்தானுடைய அம்புகளும், இன்னொருபுறம் தேவ கோபமும் ஜனங்களிடம் இறங்கி வருவதை பார்க்கிறோம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக துக்கமான செய்தி என்னவென்றால் துன்மார்க்கர் அழிந்து போவதை பார்க்கிலும் கபடு சூது அறியாத

ஏழை மக்கள் அதிக கஷ்டப்படுவதையும், மரண அலைகள் எங்கும் அலைமோதுவதையும் காண்கிறோம். கொடிய கொரோனா சிறிய வைரஸாக இருந்தாலும் ஒரு மணி நேரத்தில் ஒரு மனிதனின் உயிரை கொண்டு போய்விடுகிறது. படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோரையும் அது ஆட்கொள்கிறது. அநேக ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள், வியாபார நிறுவனங்கள், விளையாட்டு கூடங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது. வீட்டில், அப்பார்ட்மென்ட்டில் இருந்தால் கூட இந்த கொரோனோ என்னும் வைரஸ் ஒரு மரண தூதன் போல சென்று குடும்பத்தையே அழித்து விடுகிறது. கர்த்தருடைய பிள்ளைகளும் இதனிமித்தமாய் அதிகமாய் பாதிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். அவர்களில் சிலர் மரித்து பரலோகம் சென்றிருப்பதையும் நாம் அறிவோம். விசேஷமாக நம் நாட்டில் உள்ள அனைவரும் மரண பயத்தில் இருப்பதை நம்மால் காண முடிகிறது. ஒரு பக்கம் மரண பயம், இன்னொரு பக்கம் வேலை இழப்பின் நிமித்தம், வியாபார முடக்கத்தின் நிமித்தம், கடன் பாரங்கள், மனச் சோர்வுகள், வேண்டாத பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகுதல் போன்றவற்றிற்கு மக்கள் ஆளாகிறார்கள். நம் தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் அநேகரை மரண பயம் ஆண்டுகொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். மற்றொருபக்கம் இஸ்ரேல் தேசத்தில் நடக்கும் யுத்தங்கள் நம்மை கலங்க வைத்து கர்த்தருடைய இரண்டாம் வருகையை நமக்கு அதிகமாக எச்சரித்து உணர்த்துகிறது! இந்த நிலையில் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்குக் கொடுத்த வார்த்தையை உங்களுக்கு நான் இப்பொழுது எழுதியுள்ளேன்.

வேதத்தை நாம் உற்று நோக்கும்பொழுது பயம் என்பது ஆதாமிலிருந்து ஆரம்பித்து வெளிப்படுத்தலில் கர்த்தருக்கு அன்பான சீஷன் யோவான் வரைக்கும் கடந்து செல்வதை பார்க்கிறோம் (ஆதி. 3:10; வெளி. 1:17). பழைய ஏற்பாட்டில் கர்த்தர் தம்முடைய தாசர்களை பார்த்து பயப்படாதே என்று *138* முறையும், புதிய ஏற்பாட்டில் சுமார் *30* முறையும் கூறியுள்ளார்.

தேவனால் உருவாக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம், தோட்டத்தில் தேவன் நடமாடும் சத்தத்தைக் கேட்டு தான் நிர்வாணியாய் இருப்பதை அறிந்து பயந்தான். (ஆதி. 3: 10)

கர்த்தருடைய சிநேகிதனாகிய ஆபிரகாம் பயந்தான் (ஆதி. 15:12)

ஈசாக்கை பார்த்து கர்த்தர் பயப்படாதே என்றார் (ஆதி. 26: 24)

ஏழை அடிமைப் பெண்ணாகிய ஆகாரை பார்த்து கர்த்தருடைய தூதன் பயப்படாதே என்று கூறினார் (ஆதி. 21: 17).

ராகேல் பயந்தாள் (ஆதி. 35: 17)

இஸ்ரேல் ஜனங்கள் பயந்தார்கள் (யாத். 14:13; உபாகமம் 7:19)

யோசுவாவை பார்த்து கர்த்தர் பயப்படாதே என்றார் (யோசுவா 1: 5, 9)

கிதியோன் பயந்தான்; கர்த்தர் அவனைப் பார்த்து பயப்படாதே என்றார் (நியாயா. 6:23)

இஸ்ரேல் ஜனங்கள் கோலியாத்தை கண்டு பயந்தார்கள். (1 சாமுவேல் 17: 11)

பக்தன் தாவீது பயந்தான் (1 சாமுவேல் 21: 12)

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து படகில் இருந்தும், சீஷர்கள் கடல் அலைகளின் மோதலை கண்டு பயந்தார்கள் (மாற்கு 4: 40,41; 6: 50)

இப்படி நாம் சொல்லிக் கொண்டே போகலாம். உண்மையிலேயே கர்த்தர் நம்மை பார்த்து கூறுவது, நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே பயப்பட வேண்டும் என்பதே (லேவி. 19:32; நீதி. 23:17). நாம் ஒன்றான மெய் தேவனாகிய உன்னதமான தேவனுக்கு பயப்படும்பொழுது உலகிலுள்ள எந்த மனுஷனுக்கும் நாம் பயப்பட தேவையில்லை. எவ்விதமான கொடிய வியாதி, கஷ்டம், சமாதான குறைவுகள், யுத்தங்கள், சண்டைகள், வறுமைகள் எவை நம்மை சூழ்ந்து கொண்டாலும் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், "பறந்து காக்கிற பட்சிகளைப் போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துக் தப்பப்பண்ணுவார்; அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார்"- (ஏசாயா 31:5) நாம் அதிகமாக பயப்படும் பொழுது அது நம்மை பலவிதமான வேதனைகளுக்குள்ளும், வாதைகளுக்குள்ளும் அழைத்து சென்று விடும்.

அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனை யுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல 1 யோவான் 4: 18

வானத்தையும், பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள தேவன் மீது நாம் பரிபூரண அன்பு செலுத்தும்பொழுது பயம் நம்மைவிட்டு அகலுகிறது. கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்ற தைரியம் நமக்குள் வந்துவிடுகிறது.

இயேசுகிறிஸ்து உயிரோடு எழுந்த பிற்பாடு தம் சீடர்களை பார்த்து பயப்படாதே (யோவான் 20:19) என்று சொல்கிறார். கடலில் பயணம் செய்யும் பொழுது அகோரமான அலைகள் படகை மோதி அடிக்கும்பொழுது பயப்படாதே என்று கூறினார். கொடிய வியாதியால் தங்களுக்கு அன்பானவர்களை இழக்கக் கொடுக்கும் பொழுது (மரிக்க) கண்ணீரில் வாழும் மக்களை பார்த்து பயப்படாதே என்று கூறுகிறார். (மாற்கு 5:36) அவர் அப்படி கூறும்பொழுது எத்தனை மகிழ்ச்சி, எத்தனை தைரியம் நமக்கு வருகிறது. கர்த்தர் தம் அன்பு சீடன் யோவானைப் பார்த்து,

நான் அவரைக் கண்டபோது செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்;

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் - வெளி. 1: 17, 18

இவ்விதமாய் கூறுகின்றார். எனவே, நாமும் எதற்கும் கலங்கவோ, திகைக்கவோ, பயப்படவோ தேவையில்லை.

பூமி அதிர்ந்தாலும் ஆழி பொங்கினாலும் என்ன
நேரிட்டாலும் அஞ்சிடோம்
யேகோவா துணை நிற்கிறார் அஞ்சிடோம்,
மாற்றானை வீழ்த்தி ஜெயிப்பார் அஞ்சிடோம்
என்று பக்தன் பாடுவதை நாம் அறிவோம்.

இனி நாம் நம்மிடத்தில் ஏற்படுகின்ற பயங்களுக்கு காரணம் என்ன, அவைகள் எங்கிருந்து வருகிறது. அந்த பயத்தை நம்மைவிட்டு நீக்கி கர்த்தர் நமக்கு என்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறார் என்பதை பற்றி இச்செய்தியில் நாம் பார்ப்போம்.

## 1. பரிசுத்த தேவனை நாம் காணும்போது, நமது தகுதியற்ற நிலையைக் கண்டு பயப்படுகிறோம்

சர்வவல்லமையுள்ள மகா பரிசுத்தமான நித்திய வழியாகிய தேவனை நாம் காணும் பொழுது சாதாரண மானிடர்களாகிய நாம் பயப்படுகிறோம். உதாரணமாக ஏசாயா என்னும் மிகப்பெரிய தீர்க்கதரிசி தேவனுடைய மகிமையை தேவாலயத்தில் பார்க்கும்பொழுது மிகவும் பயந்தான்.

அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன் - ஏசாயா 6: 5

ஆனால், கர்த்தர் தம்முடைய சேராபீன்களில் ஒருவரை அனுப்பி அவன் வாயை தொட்டு அவன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவர்த்தியாகிறது என்று கூறுகிறார். எத்தனை பெரிய சந்தோஷம்! அதேபோல புதிய ஏற்பாட்டில் எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாகிய இயேசுகிறிஸ்து அவருடைய மகிமையின் செயல்களை பாவியான பேதுரு கண்ட பொழுது மிகவும் கலங்கி அவர் பாதத்தில் விழுந்து "ஆண்டவரே நான் பாவியான மனுஷன் என்னைவிட்டு நீர் போய்விடும்" என்று மிகுந்த நடுக்கத்துடனும், பயத்துடனும் சொல்கிறான். ஆனால், கர்த்தர் இயேசு அவன் பயத்தை நீக்கி தம்முடைய உன்னதமான பணிக்கு அவனை அழைப்பதை காண்கிறோம். கர்த்தர் இயேசு பேதுரு செய்த எந்த பாவங்களை குறித்தும் பேசவேயில்லை, குற்றஞ்சாட்டவும் இல்லை. அதற்கு பதிலாக அவனை கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்கு என்று ஆயிரக்கணக்கான மக்களை சீஷர்களாக மாற்றும்படியான தலைவனாக ஏற்படுத்துகிறார். எத்தனை ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? (லூக்கா 5: 8-10; மத்தேயு 16: 18,19; யோவான் 21: 15-17) அதேபோல கொலைகார சவுல் இயேசுகிறிஸ்துவின் உன்னதமான மகிமையின் ஒளியை காணும்பொழுது அவன் நடுங்கி திகைக்கிறான்.

அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார் - அப். 9: 6

இயேசு கிறிஸ்துவை பின்பற்றினவர்கள் அனைவரையும் துன்பப்படுத்தி மிகவும் வேதனைக்குள்ளாக்கி அவர்களை சிறையில் அடைத்து, கொலைக்கு சம்மதித்த இந்த பொல்லாத சவுலை கர்த்தர் தமது அன்பின் சீடராக மாற்றுகிறார். சவுல் இயேசுகிறிஸ்துவினுடைய சிலுவையின் உபதேசமாகிய நித்திய ஒளியை பார்க்கும் வரை அவன் தன்னை ஒரு நீதிமான் என்றும், கல்விமான் என்றும், நியாயப்பிரமாணத்தை சற்றும் மீறாதவன் என்றும், பாவமே செய்யாதவன் என்றும் எண்ணுகிறான். எனினும், ஒரு இருளான அறையில் வெளிச்சம் வரும்

பொழுது அந்த இருள் நீங்குவது போல கர்த்தருடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சிலுவையின் சுவிசேஷத்தின் அறிவாகிய ஒளி அவன் மேல் படும்பொழுது அவனுக்குள் மறைந்திருந்த கொலை வெறி பிடித்த பயங்கரமான பாவம் என்னும் இருள் அவனைவிட்டு அகன்றது.

ஆம் அன்பானவர்களே! இதற்காகத் தான் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை உலகிற்கு அனுப்பினார். இயேசு மாத்திரம் வந்து நமக்காக சிலுவையில் மரித்து தம் ஜீவனை கொடுத்து உயிர்த்தெழுந்திராவிட்டால் நாம் இன்னும் நம்முடைய பாவங்களில் மரித்துக் கொண்டிருப் போம். எனினும் நம்பிக்கையற்ற, பாவிகளாகிய நம்மை அவர் தமது பாவமற்ற பரம ஒளியால் நம்முடைய பாவங்களை நீக்கி நம் வாழ்வை உயர்த்தி தமக்காக வல்லமையாக பயன்படுத்தி, கனி கொடுக்கும் கொடிகளாக மாற்றுகிறார். (லூக்கா 7:38-50; 19:1-10; யோவான் 1:5,9; மத்தேயு 1:21,23; 1தீமோத் 1:15; ஏசாயா 44: 22; 43: 25; 1:18; மாற்கு 2:17; அப். 4:12; ஏசாயா 45: 25).

அன்பு தேவ ஜனங்களே! இன்னமும் நீங்கள் உங்களை கர்த்தருக்கு முன்பாக நான் ஒரு அருகதையற்றவன், தகுதியற்றவன், பல பாவங்களை செய்தவன் என்று உங்களை குற்றப்படுத்துகிற மனசாட்சிக்கு இடம் கொடுக்காமல் இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற அன்பை நினைத்து பாருங்கள். ஏனென்றால், இயேசுகிறிஸ்துவின் அன்பு சகல பாவங்களையும் மூடும் (1 யோவான் 4:8). மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடையபாவங்களை நம்மைவிட்டு விலக்கி விடுவார் (சங்கீதம் 103:12; நீதி. 10:12). எனவே பாவிகளாகிய நாம் சந்தோஷத்துடனும், தைரியத்துடனும் பயப்படாமல் இயேசுவை நினைத்து அனுதினமும் அவரை ஸ்தோத்தரித்து அவருக்கு ஊழியம் செய்வோமாக! விசுவாசத்தில் குன்றி விடாமல் இருப்போம். அவரை பற்றும் பயத்தில் அனுதினமும் வளருவோம்.

## 2. பலவிதமான வியாதிகள், சடுதியான இழப்புகள், விபத்துக்கள் நம்மை அதிகமாக பயப்படுத்துகிறது

விபத்துக்கள் நம்மை அதிகமாக பயப்படுத்து கிறது அநேகருக்கு பாம்பை கண்டால் பயம். அதுவும் இரவில் கனவுகளில் பாம்பை கண்டால் கர்ப்பிணிகளுடைய வயிற்றில் உருவான குழந்தைகள் கலைந்துவிடுகிறது. இதைவிட வேடிக்கையான காரியம் என்னவென்றால், பல மேல்நாடுகளில் (அமெரிக்கா, கனடா, லண்டன், ஐரோப்பா நாடுகளில்) ஒரு ஈ அல்லது பறக்கின்ற சிறிய பூச்சி இவற்றை கண்டாலே பிள்ளைகள் பயந்து அம்மா, பூச்சி பூச்சி என்று அலறுவார்கள். பெரிய பெரிய ராக்கெட் எல்லாம் கண்டுபிடித்தவர்கள் கூட ஒரு சிறிய பூச்சியை கண்டு அதிகம் பயப்படுவார்கள். சிலருக்கு அடிக்கடி தாங்கள் காண்கிற பொல்லாத ஆவிகளை கண்டு பயப்படுவார்கள். சிலருக்கு நீரழிவு வியாதி, கேன்ஸர் வியாதி, மூளை வளர்ச்சியின்மை என்றால் பயம் மற்றும் இப்பொழுது நாம் காண்கிற கொரோனா என்னும் கொடிய தொற்று நோயை கண்டு பயப்படுகிறவர்கள் ஏராளம் ஏராளம்.

எனினும் அன்பு தேவ பிள்ளைகளே! நாம் எதற்கும் கலங்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் சத்துருவாகிய சாத்தானை தம்முடைய சிலுவையின் மரணத்தினால் ஜெயித்த இயேசு பரம வைத்தியராக, பராக்கிரமசாலியாக நம்மோடு எப்போதும் இருக்கின்றார். அவர் நம்முடைய வியாதிகளையும், கலக்கத்தையும், பயத்தையும் ஒரு நொடியில் நீக்கி நம்மை பரிபூரணமாய் விடுவிப்பார் (சங்கீதம் 103:3-5; யாத்திராகமம் 23: 25) உன்னத மானவரின் மறைவில் இருக்கிறவன் சர்வவல்ல வருடைய நிழலில் தங்குவான். அநேகர் வயதாகும் பொழுது காதில் சில சத்தங்களை கேட்கிறார்கள். வீட்டில் ஒரு ஆவி நடமாடுவதாகவும் கூறுவார்கள். இவற்றால் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். அன்பு பிள்ளைகளே பிசாசின் சேனைகளை ஒருபோதும் பார்க்காதீர்கள். கர்த்தர் உங்கள் அருகில் இருக்கிறார். நீங்கள் தேவனுடைய பிள்ளைகள், ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது. மரணமே நேரிட்டாலும் அதையும் கர்த்தர் ஜெயமாய் விழுங்குவார். (மாற்கு 5:36-43; யோவான் 11: 1- 44; லூக்கா 7: 11-14; ஏசாயா 38: 1- 22; ரோமர் 16:20; 1 யோவான் 3:8; ஏசாயா 53:5; சங்கீதம் 107: 20; 91 : 1-16)

நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார் - சங்கீதம் 34: 4

இச்செய்தியை நீங்கள் வாசிக்கும் பொழுதே மகா இரக்கமுள்ள இயேசு உங்கள் அருகில் வந்து பயப்படாதே என்று சொல்லி உங்களுக்கு இருக்கிற சகல வியாதிகளையும் நீக்கி உங்களை பயமுறுத்துகிற பிசாசை விரட்டி உங்களை கரம் பிடித்து மோட்ச கரை

சேரும் வரைக்கும் வழி நடத்துவார். அப்படியே மரணம் நேரிடுவதாக இருந்தாலும் நம்மை பிசாசின் கரங்களில் ஒப்புக்கொடுக்காமல் அடுத்த நிமிடமே நம் ஆத்துமாவை தாம் வாழும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

இந்த தொற்று நோயின் காலத்தில் நூற்றுக்கணக்கான மக்களுக்கு நாம் ஜெபித்த பொழுது மூன்று பேர் தவிர மற்றவர்களை கர்த்தர் தம்முடைய மனதுருக்கத்தால் ஆபத்தான கட்டத்தில் அவர்கள் இருந்த போதிலும் அவர்களை விடுவித்து பரிபூரண சுகம் அருளியுள்ளார். அநேகர் தங்களுடைய சாட்சி களையும், கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளையும் கூட நமது ஊழியத்திற்கு அர்ப்பணித்துள்ளார்கள்.

இந்த பொல்லாத தொற்று நோய் அநேகருடைய தொழில் மற்றும் வேலைகள், வியாபாரங்கள், பல்வேறு வகைப்பட்ட பிழைப்பிற் கான முயற்சிகளை எல்லாம் முடக்கிவிட்டதை பார்க்கிறோம். பெரிய பெரிய கடைகள் சில்லரை வியாபாரிகள், ஐ.டி. கம்பெனிகள், டிராவல் ஏஜென்ஸி, ரியல் எஸ்டேட், வாகனம் ஓட்டுபவர்கள், சிறு சிறு தொழிலை நம்பி வாழ்பவர்கள், மளிகை கடைகளை வைத்திருப்போர் அவர்கள் வாழ்வின் ஆதாரங்களை இந்த கொரோனா தொற்று அசைத்துள்ளது. எங்களுடைய பங்காளர்கள் அநேகரை விசாரிக்கும் பொழுது ஒவ்வொருவரும் இந்த கொரோனாவின் நிமித்தம் எப்படி எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அறிய முடிந்தது. அரசாங்கத்தில் நிரந்தரமான வேலையில் இருப்பவர்கள் தவிர மற்ற எல்லோரும் பயங்கரமான பணக் கஷ்டத்தில் சிக்கி தவிக்கிறார்கள். உதாரணமாக தொழிலுக்காக கடன் வாங்கி இருப்பவர்கள், தொழில் நன்றாக ஓடும் என்று சொல்லி கடன்வாங்கி இருப்பார்கள்; தொழில் முடங்கியதின் நிமித்தம் அந்த கடனை திரும்ப செலுத்த முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். சுமார் ஒன்றரை வருடமாய் இந்த கொரோனா பரவலின் நிமித்தம் மக்கள் எங்கும் வெளியே போக முடியாதபடி அச்சத்தில் இருப்பதை பார்க்கிறோம். எனினும் கலங்காதீர்கள்! நீங்கள் செய்ய வேண்டிய சில காரியங்கள்,

(1) ஊரடங்கு காலத்தில் அதிகமாக கர்த்தருடைய வேதத்தை தியானித்து அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைத்து விசுவாசத்துடன் அதை பற்றி கொள்ளுங்கள்.

(2) தேவன் மீது நீங்கள் வைத்திருக்கிற நம்பிக்கையில் கொஞ்சம் கூட குறையா திருங்கள். அப்பொழுது கர்த்தர் புதுவிதமான வழிகளில் உங்களை நடத்தி உங்களை ஆசீர்வதிப்பார். (சங்கீதம் 1:3; எரேமியா 17: 7,8; யோசுவா 1:8)

(3) தேவனுடைய வாக்குத்தத்த வசனங்களை பற்றி பிடித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால், தேவன் நமக்கு தந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் கிறிஸ்து இயேசுவிற்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றன. (2 கொரி. 1:20; உபாகமம் 15: 4-11; சங்கீதம் 71:20-24; ஏசாயா 58: 7-11; சங்கீதம் 41:1,2,8,3)

(4) சாரிபாத் ஊர் விதவையினுடைய வாழ்க்கையை கவனித்து பாருங்கள். தானும் தன் மகனும் ஜீவனை விடும் நிலையில் கொடிய பஞ்சத்திலும், தரித்திரத்திலும் வாழ்ந்தாலும் கூட தேவனுடைய மனுஷனாகிய எலியாவை ஆதரிக்கும்பொழுது கர்த்தர் அவளை கைவிட வில்லை. (1 இராஜா. 17:11- 24) மழை பெய்யும் நாள் வரும் வரைக்கும் அவளையும் அவள் மகனையும், தீர்க்கதரிசியையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். பிற்பாடு இறந்து போன மகனையும் எழுப்பினார்.

இப்போதும் இயேசுகிறிஸ்து கூறின அருள் வார்த்தைகளை மனதில் கொள்ளுங்கள். மத். 6:25-34 வரைக்கும் நம்மை குறித்து கர்த்தர் "எந்நிலையிலும் கவலைப்படாதீர்கள்" என்று கூறுகிறார். நம்மை படைத்த பரலோக தந்தை சிட்டு குருவிகளை காப்பாற்றும் பொழுது நம்மையும் கட்டாயம் பாதுகாப்பார். ஆனால் அதற்கு சில நிபந்தனைகளை கூறுகிறார். கஷ்டங்களின் நிமித்தம், கவலைகளின் நிமித்தம் நாம் சோர்ந்து போகாமல் தொடர்ந்து தேவனுடைய ராஜ்ஜியத்தை தேட வேண்டும். தேவனுடைய ராஜ்ஜியத்திற்கான சகல காரியத்திற் காகவும் முனைந்து ஈடுபட வேண்டும்.

ஆபிரகாமும், ஈசாக்கும் கொடிய பஞ்சத்தை அனுபவித்தார்கள். எனினும் ஆபிரகாம் மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் கொடுத்த பொழுது கர்த்தர் அவனை பட்டினியாக விடாமல் ஒரு சிற்றரசன் நிலைக்கு உயர்த்தினார். பஞ்ச காலத்திலும் அவனையும், அவனை சார்ந்தவர்களையும் போஷித்தார். (ஆதி. 12:10; 13: 2) பவுல் உபதேசத்தை கேட்டு இயேசுவை ஏற்றுக்கொண்ட பிலிப்பு பட்டணத்தாரை கர்த்தர் ஆசீர்வதித்தார். அவர்கள் தங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு, வேண்டுதலோடு தேவனுக்கு தெரியப்படுத்தின பொழுது மிகப்பெரிய சமாதானத்தை அவர்களுக்கு தந்தார். தங்கள் கஷ்டத்தின் மத்தியிலும் பவுலை

ஆதரித்த பொழுது கர்த்தர் அவர்களுக்கு எந்த ஒரு குறைவும் இல்லாமல் அவர்களை போஷித்தார். (பிலிப்பியர் 4: 6,7,19)

இதேபோல ரூத்தின் வாழ்க்கையை பாருங்கள். ரூத் தன் கணவனை இழந்தபொழுது மாமியார் வழிபட்டு வந்த இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை அதிகமாய் நம்பி தன் இனத்தையும், பந்து ஜனங்களையும் விட்டுவிட்டு மாமி நகோமியை ஆதரிக்கிறாள். அதனிமித்தம் கர்த்தர் போவாசின் மூலமாய் அவள் சற்றும் எதிர்பாராத மிகப்பெரிய நன்மையை அவள் வாழ்க்கையில் செய்கிறார்.

இப்போதும் மகளே, நீ பயப்படாதே! உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன் நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாம் அறிவார்கள்

- ரூத் 3: 11.

எனவே அன்பு தேவ பிள்ளைகளே ஒருபோதும் சோர்ந்து போகாதீர்கள். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இக்கட்டான நிலையில் குடும்பமாய் ஒன்று கூடி நம்முடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூட தேவனிடத்தில் தெரியப்படுத்துவோம். அப்பொழுது நிச்சயமாய் கர்த்தர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் இந்த கொடிய காலத்தில் காப்பாற்றி, ஆதரித்து உங்கள் கடன்களை எல்லாம் அடைத்து உங்களை ஆசீர்வதிப்பார்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன்,நம் தேவன் எனவே, விசுவாசத்தில் நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம். அவர்களுக்கு செய்த அற்புதத்தை தேவன் நமக்கும் செய்ய மாட்டாரா? நிச்சயம் செய்வார்! 22 இலட்சம் இஸ்ரேல் ஜனங்களை 40 வருடம் ஒரு குறைவின்றி வனாந்தரத்தில் ஆதரித்த தேவன் உங்களையும் நிச்சயம் ஆதரிப்பார்.

## 3. கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற நீங்கள் பயப்படாதீர்கள்!

தேவன் உங்களுக்கு காண்பித்து கொடுத்த திட்டங்கள் நிறைவேறாமல் பல எதிர்ப்புகளை, கஷ்டங்களை நீங்கள் சந்திக்கிறீர்கள். காரணமற்ற காயங்களை அடைகிறீர்கள். கலங்காதீர்கள்! கர்த்தர் யோசுவா 1:5 முதல் 9 வரை சொல்லப்பட்டபடி, உபாகமம் 31:6,8ல் சொன்னபடி, அப்போஸ்தலர் 18:9ம் வசனத்தில் பவுல் அடிகள் சொன்னது போல,சிறு பிள்ளையாய் இருக்கிறேன் என்று கூறின தீர்க்கதரிசி எரேமியாவிற்கு சொன்னது போல, இயேசுகிறிஸ்து தாமே பரலோகத்திற்கு ஏறிச் செல்வதற்கு முன் சீடர்களிடம் சொன்னது போல உங்களிடமும் சொல்கிறார்.

அப்போஸ்தலர் 18:9; மத்தேயு 28: 18-20; எரேமியா 1:8; ஏசாயா 41:10-20; ஏசாயா 54:14-17; அப்போஸ்தலர் 9:31ன் படி கர்த்தர் உங்களை ஆதரிப்பார். கர்த்தருடைய ஊழியக்காரராகிய, விசுவாசிகளாகிய நீங்கள் ஏறெடுக்கிற எந்த அந்தரங்க ஜெபமும், உபவாச ஜெபமும், அழுகையோடும், கண்ணீரோடும் இரவெல்லாம் திறப்பின் வாசலிலிருந்து பாடுபடுகிற மக்களுக்காக நீங்கள் செய்யும் ஜெபமும் ஒருபோதும் வீண் போகாது. நிச்சயமாய் அவைகள் கர்த்தருடைய சமூகத்தில் ஜெப தூபமாய் ஏறெடுக்கப்பட்டு மிகவும் ஆச்சரியப் படத்தக்கபடி நாம் சற்றும் எதிர்பார்த்து இருக்க முடியாத மகத்துவமான செயல்களை கொண்டு வரும். எல்லாவிதத்திலும் கிறிஸ்தவர்களாகிய நாம் நசுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, இழிவாக எண்ணப்பட்டாலும் சர்வவல்லமையுள்ள, உலகத்தை ஆளுகிற கர்த்தர் நம் ஜெபங்களை கேட்டு பெரிய பெரிய மாறுதலை வெகு சீக்கிரமாய் நாம் வாழுகின்ற நாட்டிலும், பூமி முழுவதிலும் கொண்டு வருவார். அதில் சந்தேகமே இல்லை எனவே சோர்ந்து போகாதீர்கள்! நம்மை சுற்றி இருக்கிற இருளை நீக்கி வெளிச்சத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருவார்.

நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப் பட்டிருக்கிறது சங்கீதம் 97: 11

உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக சங்கீதம் 5: 11

கர்த்தர் தாமே உங்களோடு இருந்து, உங்களை ஆசீர்வதித்து பாதுகாப்பாராக. ஊழியத்திற்காக அனுதினமும் ஜெபிக்கிற ஜெப வீரர்களுக்காகவும், ஊழியத்தை தாங்குகிற பங்காளர்களுக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். தேவன் தாமே உங்கள் கண்ணீரின் விண்ணப்பத்தை கேட்டு உங்களை எல்லா இக்கட்டுக்கும் விலக்கிக் காத்து தம்முடைய மகத்துவமான அற்புதங்களின் மூலம் மகிழ்விப்பாராக! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

# அன்பரின் ஊழியம் நடத்திய விடுமுறை வேதாகமப் பள்ளி

அப்பொழுது, சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டு வந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள்.
இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து; சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.
எவனாகிலும் சிறுபிள்ளையைப் போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார். - மாற்கு 10:13-16



கிறிஸ்துவுக்குள் எனக்கன்பானஅன்பரின் ஊழிய பங்காளர்களே!

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

கர்த்தருடைய அளவற்ற கிருபையும், சமாதானமும், ஆசீர்வாதமும் உங்களோடுகூட எப்போதும் இருப்பதாக. இந்நாள் வரை நீங்கள் செய்கின்ற ஜெபங்கள், உதவிகளுமே கர்த்தர் தந்த இந்த ஊழியம் வளர உதவியாக உள்ளது. சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் என்று 2 கொரி. 9:6ல் சொன்னது போல நீங்கள் அனுப்பும் சிறிய காணிக்கை என்றாலும் பெரிய காணிக்கை என்றாலும் அதைகிறிஸ்துவுக்குள் நாங்கள் மிகுந்த நன்றியோடு ஸ்தோத்திரபலிகளை கர்த்தருக்கு செலுத்தி அதை நல்ல விதத்தில் பயன்படுத்துகிறோம்.

விசேஷமாக கடந்த ஏப்ரல் மாதம் பள்ளி விடுமுறை நாட்களில் 400க்கும் மேற்பட்ட தன்னார்வம் கொண்ட சிறுபிள்ளைகளுக்கு விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்தப்பட்டன. கிறிஸ்துவின் மீது அழியாத, மாசற்ற அன்பு கொண்ட பிள்ளைகளுக்கு மட்டும் (பெற்றோர்களின் சம்மதத்தின் பேரில் நடத்தப்பட்டது) இந்த கூட்டத்திற்கு நமக்கு அரங்கத்தை கொடுத்த தேவ மனிதருக்கு நன்றி கூறுகிறோம். பிள்ளைகளுக்கு வேண்டிய பேனா, பென்சில், நோட் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் Puppet Show மற்றும் எளிமையான முறையில் நல்லொழுக்கப் பாடம் அவர்கள் உள்ளத்தில் பதிய எல்லாவித முயற்சி களும் எடுக்கப்பட்டன. இரண்டு வேளை அவர் களுக்கு ஆகாரமும், சிற்றுணவும் வழங்கப்பட்டது. பிள்ளைகள் VBS என்று சொன்னவுடனே மிகுந்த ஆர்வத்துடன் வந்திருந்தார்கள். சில பெற்றோர்களும் பிள்ளைகளோடு வந்திருந்தார்கள். சின்னஞ்சிறு உள்ளங்கள் கள்ளம் கபடமின்றி இறைவன் இயேசுவினிடத்தில் ஜெபிக்கும் காட்சி கண் கொள்ளா காட்சியாக இருந்தது. மிகுந்த ஊக்கமாக ஜெபித்து சிறு பிள்ளைகள் தங்களுடைய சிறு சிறு பாவங்களை அறிக்கையிட்டு தேவனை ஸ்தோத்தரித்து சிறு சிறு கதைகள் மூலம் வேதத்தின் உண்மைகளை அறிந்து கொண்டார்கள். இயேசுவை பற்றிய சரித்திரம் அவர்களுக்கு சொல்லப்பட்டது. சில பிள்ளைகள் இயேசுவை பற்றி சொல்லும் பொழுது கண்ணீர் வடித்தார்கள். சில பிள்ளைகள் ஸ்தோத்தரித்தார்கள். முடிவில் அந்த பிள்ளைகளுக்கு ஒரு நல்ல பரிசு கொடுக்கப்பட்டது. இந்த கூட்டத்திற்கு தன்னார்வ முள்ள சிலரும், நமதுஅன்பரின் ஊழியமும் உதவிகரம் நீட்டியது.பிள்ளைகள் பத்திரமாய் வந்து அமைதியாக பாடங்களை கவனித்து நல்ல உணவை அருந்தி

இரண்டு நாட்களாய் தேவ சமூகத்தில் அமர்ந்திருந்தார்கள். பிற்பாடு பத்திரமாய் அவரவர் வீடுகளுக்கு நம்முடைய வாகனத்தின் மூலம் அழைத்து செல்லப்பட்டார்கள்.

ஆம் எனக்கன்பர்னவர்களே! பல சிறுவர்கள் குடும்ப சூழ்நிலையின் நிமித்தம் சொல்லொண்ணா வேதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். பசி, பட்டினி, சரியான உடுப்பு இல்லாமல், தங்க வசதி இல்லாமல், வியாதியினாலும் கஷ்டப்படுகிறார்கள். கிராமங்களில் உள்ள இந்த பிள்ளைகளுக்கு சுவிசேஷம் என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் இயேசுவை பிடிக்கும். அவரைமுன் பின் தெரியாத மக்கள் சகோதரனுடைய சாட்சியை கேட்கும்பொழுது மிகவும் ஆச்சரியப்படுகிறார்கள். அழுது அந்த தெய்வீக அன்பிற்காய் ஏங்குகிறார்கள். இந்த பிஞ்சு உள்ளங்களில் தேவ பக்தியையும், நன்னெறிகளையும் உட்புகுத்துவதே அன்பரின் ஊழியத்தின் நோக்கம். மற்றபடி வேறு எதுவும் இல்லை. தொடர்ந்து இந்தபணிகள் அன்பரின் ஊழியத்தின் மூலம் அநேக கிராமங்களில் நடைபெற ஊக்கமாய் ஜெபியுங்கள்.

இதுவும் அல்லாமல் சில கிராமங்களில் மிகுந்த கஷ்டத்தோடு ஊழியம் செய்கிற தேவ பிள்ளைகள் தங்களுக்கு ஆலயம் கட்டி தருமாறு கேட்டிருக்கிறார்கள். உங்களில் யாராவது ஆலயம் கட்ட முன்வருவீர்கள் என்றால் நாம் இணைந்து அதையும் செய்து தேவ நாமத்தை மகிமைப் படுத்துவோம். (சங்கீதம் 122 மற்றும் 132)

நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களைவெட்டிக்கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமைவிளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் - ஆகாய் 1 : 8

நான் என் பரிசுத்தபர்வதத்துக்குக் கொண்டு வந்து: என் ஜெப வீட்டிலே அவர்களை மகிழப் பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்க தகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் - ஏசாயா 56: 7

நம்மால் என்னென்ன தேவ மகிமைக்காக செய்யமுடியுமோ அதனை செய்து தேவனை மகிமைப் படுத்துவோம். கர்த்தர் தாமே இந்த நல்ல பணிகளுக்காய் உதவி செய்கிற உங்கள் ஒவ்வொரு வரையும் அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக. இப்பணிகளுக்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் அன்பரின் ஊழிய வங்கி கணக்கிற்கு அனுப்பவும்.

## விடுமுறை வேதாகம பள்ளியில் பயின்ற மாணவர்கள்









# கர்த்தராகிய தேவன் நமது பங்காளர்கள் மத்தியில் செய்த அற்புதங்களில் ஒரு சில உங்கள் விசுவாசத்திற்காக

## கோவிட் - 19 வியாதியிலிருந்து அற்புதம் சுகம் கிடைத்தது!

எனது கணவருக்கு கோவிட்-19 நோய் ஏற்பட்டு மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டார். அதாவது நுரையீரல் பாதிப்பு உண்டாகி மூச்சு திணறல் ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இக்கட்டான நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு ஜெபிக்கக் கேட்டேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு ஆபத்தான கட்டத்திலிருந்த எனது கணவரை தப்புவித்தார். இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள். தேவன் எங்கள் குடும்பத்தில் செய்த நன்மை களுக்காக நன்றி செலுத்தி எங்கள் பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியப் பணிகளுக்கு அனுப்பி உள்ளோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

## அமெரிக்கா விசா கிடைக்கும்படி செய்த அற்புதர்!

என் மகள் எப்சி பரிமளா வேலை விஷயமாக அமெரிக்கா செல்ல விசா கிடைக்கும்படி Dr. ஆனந்த ஸ்திரா அவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் கடிதம் அனுப்பினாள். சகோதரர் அவர்கள் ஜெபித்து பதில் கடிதம் அனுப்பினார்கள். ஜெபத்தை கேட்ட சர்வவல்ல தேவன் மகளுக்கு விசா கிடைக்க கிருபை செய்தார். மகள் புறப்படும் முன் தடுப்பூசி போட்டுக் கொண்டு குடும்பமாக செல்ல இருக்கிறார்கள். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அன்பரின் ஊழியத்திற்கு நன்றி காணிக்கை அனுப்புகின்றேன். கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!

- திருமதி. பத்மாவதி தேவன்பு, கடலூர்

## பணியிட மாறுதல் கிடைக்க கிருபை செய்த தேவன்!

திருச்சி குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வருவதினால் என்னுடைய குடும்பம் மிகவும் ஆசீர்வாதமாய் உள்ளது. ஒருமுறை அக் கூட்டத் தில் கலந்துகொண்டு என் கணவருக்கு சென்னை யிலிருந்து திருச்சிக்கு பணி இடமாறுதல் வேண்டுமென ஜெப விண்ணப்பம் எழுதி தந்தேன். கூட்ட முடிவில் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களிடம் ஜெபித்துக் கொண்டேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு ஒருசில மாதங்களில் திருச்சிக்கு பணி இடமாறுதல் கிடைக்கும்படி அற்புதம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. கோமளவள்ளி, திருச்சி

## கடன் தீர வழிவாசல் திறந்த சர்வ வல்லவர்!

நான் தொடர்ந்து திருச்சி குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொள்வேன்.

Tamil Whats App No: 95004 87059

இக்கூட்டங்களில் வழங்கப்படும் தேவசெய்திகள், சொல்லப்படும் சாட்சிகள், ஆராதனைகள் எனது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

இந்நிலையில் கடந்த முறை கூட்டத்தில் கலந்துகொண்ட பிறகு எனக்கிருந்த மூன்று லட்சம் ரூபாய் **(Rs.3,00,000/-)** கடன் தீர கர்த்தர் கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றேன். - திரு. ஸ்டாலின், திருச்சி

**கொரோனா என்னும் வாதையின் நிமித்தம் மிகவும் பாடுபட்ட தீவிர சிகிச்சையிலிருந்த அநேகர் நமது அலுவலகத்தை தொடர்புகொண்டு ஜெபித்தனர். அதில் மிகவும் ஆபத்தான நிலையிலிருந்தவர்களுக்கு Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபித்ததினால் கர்த்தர் அவர்களை அற்புதமாக குணமாக்கினார். அவற்றில் சிலவற்றை உங்கள் விசுவாசம் பெருகும்படி எழுதுகிறோம்.**

**அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார். அக்காலத்திலே இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம். இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும். – ஏசாயா 25:8,9**

1.மோலி, சென்னை

குடும்பமாக கொரோனாவால் பாதிக்கப்பட்டோம். அதில் 95 வயதான எனது மாமியாருக்கு ஆக்ஸிஜன் கொடுக்கும் நிலையில் இருந்தார்கள். நானும், எனது மகனும் அதிக பாதிப்பில் இருந்தபோது அன்பரின் ஊழியம் புத்தகம் கிடைத்தது. அதில் இருந்த சாட்சியை படித்ததால் நம்பிக்கை வந்து பொருத்தனை செய்தபோது அனைவருக்கும் பரிசோதனையில் நெகடிவ் என்று வந்தது. நன்றி காணிக்கை ஊழியத்திற்கு அனுப்பி உள்ளோம்.

2. கீதா, மதுரை

எனது கணவர் விவேக் கொரோனாவிலிருந்து ஜெபத்திற்கு பிறகு சுகமானார்கள்.

மற்றும்,

3. சைலஜா இம்மானுவேல் குடும்பம், சென்னை
4. Prof. Dr. Dorothy Sheela & Prof. Dr. Dharmaraj, Madurai
5. Donald, Hyderabad (Family)
6. Bro. Surenth Family
7. Prabavathy & Chandrasekar, Rajmandir
8. Praneeth, Kottagudam
9. Deena Latha & Shymala, Visakapattinam
10. Pastor Jonathan Family, Hydrabad
11. Sr. Pastor Abraham Raj Family, Zaheerabad
12. Vinay, Thadeypalli kudam
13. T. Vijayakumar, Tuni
14. Jothi Premadas, Tuni
15. Daya Sekar, Hyderabad
16. Jothi ammal's Family, Ramnad Dt.
17. Freedom Daniel Family, Delhi

மேற்கண்ட அனைவரையும் சர்வவல்ல தேவன் இக்கட்டான நேரத்தில் கொரோனாவிலிருந்து முற்றிலும் சுகமாக்கினார். **"என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்" (சங்கீதம் 6:14)** என்ற வேத வார்த்தைகளின்படி அனைவரும் பொருத்தனை காணிக்கைகளை செலுத்தி தேவனை மகிமைப்படுத்தினர். இதை வாசிக்கின்ற நீங்களும் நோய்களால் பாடுபட்டீர்களானால் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்கள் வாட்ஸ்அப், மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். கர்த்தர் நிச்சயம் உங்களுக்கும் அற்புதம் செய்வார்.

குறிப்பு : மேற்கண்ட பங்காளர்கள் அனைவரும் தேவனுடைய நாமம் மகிமைக்கென்று தங்கள் சாட்சியை வெளியிடும்படி கேட்டுக்கொண்டார்கள்.

**குறிப்பு : நாகர்கோவில் பகுதியில் வயதானவர்கள், வியாதியினால் கஷ்டப்படுபவர்கள் வீட்டிற்கு வந்து ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எங்கள் பிரதிநிதியை தொடர்புகொள்ளுங்கள். அவர்கள் உங்கள் இல்லத்திற்கு வந்து ஜெபிப்பார்கள். (அலைபேசி எண் : 82203 17472)**




**கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார், கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார் - சங்கீதம் 69:33**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

நம்முடைய தேவனாகிய கர்த்தர் மகா இரக்கமும், உருக்கமும், அன்பும், கிருபையுமுள்ள தேவன். **அவர் எளியவனை குப்பையிலிருந்து தூக்கி எடுத்து பிரபுக்களோடு உட்காரப்பண்ணுகிறார்! (1சாமுவேல் 2:8,9)** பணிந்து நொறுங்குண்ட ஆத்துமாக்களை மரணத்திலிருந்து விடுவிக்கும்படி அவர் உயர்ந்த வானத்திலிருந்து அவர்களை கண்ணோக்கி பார்க்கின்றார். அவர்களை விடுதலை யாக்க அவருடைய கண்கள் எப்போதும் அவர்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது. அவர் தமது வல்லமையாலும், இரக்கங்களாலும் அவர்களை இரட்சிக்கிறார். ஏழை மக்களை அவர் தூக்கி எடுக்கின்றார். இதைத் தான் கர்த்தர் எனது சிறு வயதிலிருந்தே எனக்கு செய்தார். **"யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்"** என்ற கூற்றின்படி அன்புள்ள தேவன் என்னை தெரிந்துகொண்டு இந்த அறப்பணிகள் மூலம் பல நன்மையான காரியங்களை ஏழை மக்களுக்கு செய்யும்படி 40 வருடமாய் உதவி செய்கின்றார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

இந்த கடுமையான கொரோனா வைரஸ் பரவல் மத்தியிலும் நமது S.J.Saves Trust மூலமாக சுமார் 68 கிராமங்களில் உள்ள 3500 மிகவும் பின்தங்கிய ஏழை பிள்ளைகள் மற்றும் வசதியற்ற 2000 வயோதிபர்களுக்கு வரும் முன் காக்கும் திட்டத்தின் படி தேவையான ஊட்ட சத்துக்களான Zinc, Vitamin Tablets, Cough Syrup, Protein, Multi Vitamin Syrup மற்றும் அவசர கால மருந்துகள் கொடுக்கப்பட்டன. அவர்களுக்கு நல்ல உணவும் வழங்கப்பட்டது. தேவனுடைய கிருபையினால் நாம் பராமரிக்கும் பிள்ளைகள் ஒருவருக்கும் கொரோனா நோய் தாக்கவில்லை.

மேலும், S.J.Saves Trust மருத்துவமனை மூலமாய் ஆக்ஸிஜன் செறிவூட்டி மிஷின் (OXYGEN CONCENTRATOR 3 No.) மூன்றும் மற்றும் ஆக்ஸிஜன் சிலிண்டர், ஆக்ஸிஜன் மாஸ்க் ஆகியவை திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி பொது மருத்துவமனைக்கு ஏழை நோயாளிகளின் பயன் பாட்டிற்கு கொடுக்கப்பட்டன. இவற்றை Dr.Ananda Stira அவர்களால் Dean Dr.Vanitha அவர்களிடம் இலவசமாய் நன்கொடையாக ஜுன் மாதம் 2ம் தேதி வழங்கினார்.

ஆம் பிரியமானவர்களே! இந்தியா முழுவதும் கொரோனா கோரத் தாண்டவம் ஆடுகிறது. யாருக்கு எப்பொழுது இந்நோய் வருகிறது என்று தெரியாத நிலையில் உள்ளோம். அநேகருடைய உயிரை அது பறித்து விடுகிறது. நம்மால் முடிந்த உதவிகளை இந்த ஏழை குழந்தைகளுக்கு செய்து அவர்கள் ஜீவனை காப்போம். இன்னும் பத்தாயிரம் (10000) ஆதரவற்ற பிள்ளைகளுக்கும், ஐந்தாயிரம் (5000) ஆதரவற்ற பெண்களுக்கும் உதவி செய்ய விரும்புகின்றோம். இதற்காக ஊக்கமாய் ஜெபித்து உதவி செய்யுங்கள்.

**உன்னைப் போல பிறனை நேசி** என்று கர்த்தர் இயேசு தாமே திருவுளம் பற்றின கட்டளைக்கு கீழ்ப்படிவோம். **(மாற்கு 12 : 30; மத்தேயு 25 : 36)**

வியாதியுள்ளவர்களுக்கு நாம் செய்யும் உதவி கிறிஸ்துவுக்கே செய்வதாகும்.

தொலைக்காட்சி ஊழியங்கள், SJ Saves Trust பணிகள் மற்றும் அலுவலக பராமரிப்புகள் என ஏராளமான தேவைகளுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உதவுகின்ற ஜெபிக்கின்ற உங்களை ஆசீர் வதிப்பாராக!

**சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமலிருங்கள் - 2 தெச. 3 : 13**

இந்த ஏழைப் பிள்ளைகளுக்கு உதவி செய்கின்ற ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே ஆசீர் வதிப்பாராக **(சங்கீதம் 115: 15)**

ஒரு இளம் மருத்துவர் தனது மனைவிக்கு இருந்த கேன்ஸர் நோய் முற்றிலும் சுகமானபடியால் 100 பிள்ளைகளுக்கு மருந்துகள், நல்ல உணவு கடந்த மாதம் வாங்கித் தந்தார்கள். அவர்கள் தங்கள் பெயரை சொல்ல விரும்பவில்லை.

தனது தந்தை சிறுநீரகக் கோளாறு, உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோயினால் பாதிக்கப் பட்டு டயாலிசிஸ்-க்கு மேல் டயாலிசிஸ் செய்து மரணத்தை நெருங்கின பொழுது அவரது மகன் பொருத்தனை செய்து நமது அறக்கட்டளைக்கு உதவினபொழுது கர்த்தர் அவரது தந்தைக்கு காட்சியளித்து அற்புத சுகமாக்கினார். தனது தந்தை பிழைப்பார் என்ற நம்பிக்கையே இல்லை. ஆனாலும் கர்த்தர் தற்பொழுது அவர்களை நல்ல சுகத்தோடு வாழ கிருபை செய்துள்ளார். தான் செய்த பொருத்தனையின்படி நமது அறக்கட்டளைக்கு உதவி செய்தார்கள். **(சங்கீதம் 66:14,19,20; 65:1; 61:8; 56:12,13)**

விசுவாசம் என்னும் பெயருடைய தன் கணவரை இழந்த வயதான விதவை தாய் நாம் ஆதரிக்கும் ஆதரவற்ற பிள்ளைகளுக்கு உதவிகள் செய்தார்கள். இதுபோல நீங்களும் உங்கள் குடும்பத்தின் சார்பில் உதவி செய்யலாம். அன்னை தெரஸாவை போல முற்காலத்தில் தங்கள் நாட்டைவிட்டு நம் நாட்டிற்கு வந்து முழுவதும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த மிஷனரிகளை போல நாம் ஏழையின் மீது கரிசனை கொண்டு அவர்களுக்கு உதவி செய்வோம்.

இப்போதும் மூன்று விதவைகள் வீடின்றி தவிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாம் நல்லதொரு வீட்டை **Rs.50,000/-**த்திற்குள் கட்டித்தர நினைக்கிறோம். கர்த்தர் ஏவுகிறபடி இவர்களுக்கு உதவி செய்யுங்கள். இப்படிப்பட்ட ஏழைகளுக்கு நீங்கள் உதவி செய்யும்பொழுது கர்த்தர் உங்கள் தீராத பிரச்சனைகளை தீர்ப்பார். எண்ணி முடியாத அதிசயங்களை உங்கள் மத்தியில் செய்வார்.


**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | |
|---|---|
| Bank A/c Name | SJ Saves Trust |
| Account No. | 019150310875369 |
| Bank Name | Tamil Nadu Mercantile Bank |
| Branch | Palakarai, Trichy. |
| IFS Code | TMBL0000019 |
| A/c Type | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | |
|---|---|
| Bank A/c Name | SJ Saves Trust |
| Account No. | 36477148891 |
| Bank Name | State Bank of India |
| Branch | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | SBIN 0000930 |
| A/c Type | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV
சனி இரவு 07.30 – 08.00

**Telugu Whats App No: 91770 87860**

## சேலம் மாவட்டம் கூத்தாட்டுப்பட்டி, பூசாரிபுரம், ஜலதண்டபுரம் மற்றும் முப்பதுக்கு மேற்பட்ட கிராமங்களில் உதவிகள் வழங்கினோம். அதில் ஒரு சில மட்டும் கீழே













# மினாம்பட்டி, காசிநகர் கிராமங்கள்





S.J.Saves Trust மருத்துவமனை மூலமாய் ஆக்ஸிஜன் செறிவூட்டி மிஷின்
(OXYGEN CONCENTRATOR) மூன்றும் மற்றும் ஆக்ஸிஜன் சிலிண்டர்,
ஆக்ஸிஜன் மாஸ்க் ஆகியவை திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி
பொது மருத்துவமனைக்கு ஏழை நோயாளிகளின் பயன்பாட்டிற்கு கொடுக்கப்பட்டன.
இவற்றை Dr.Ananda Stira அவர்களால் Dean Dr.Vanitha அவர்களிடம்
இலவசமாய் நன்கொடையாக ஜுன் மாதம் 2ம் தேதி வழங்கப்பட்டது.







## WANTED FOR MINISTRY OF JESUS, TRICHY

1. ***Accountant***
   ***B.Com.,/M.Com., Graduates***
   ***Skills Required : Tally ERP 9*** பயன்படுத்த தெரிந்தவர்கள்.
2. ***Secretary***
   ***Any UG/PG Degree***
   ***Skills Required : Good in written English***
3. ***Social Media Executive***
   ***Candidates with any UG/PG degree***

***Skills Required***

***Good in English and Tamil***
***Must be familiar with Social Media platforms***
***Knowledge of Photoshop is an added advantage***
***Creative acumen necessary***

4. ***Data Entry Operator***
   ***Candidates with any UG/PG degree***

***Skills Required : Good in computing skills***

5. ***Prayer warriors : Qualification +2/Any degree Born again Christian only.***
6. ***Sony FX-7-4K, 450 & Sony D.S.*** ஆகியகேமராக்களை உபயோகிக்கத் தெரிந்தமுன் அனுபவமுள்ளகேமராமேன்கள் தேவை.
7. ***Adope Premiers Pro***-ல் எடிட்டிங் செய்யத் தெரிந்தவீடியோஎடிட்டர்கள் (Video Editors) தேவை.
8. ***Drivers***
9. ***Cooks***
10. ***Housekeepers***

***Apply to : info@mojindia.org Apt remuneration will be given***

தகுந்த ஊதியம் கொடுக்கப்படும்.
கிறிஸ்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்

## மே மாத கேள்விகளுக்கான சரியான பதில்கள்

1. வேலை செய்ய மனதில்லாதிருக்கிறவன். (2தெச.3:10)
2. ஆமான் மற்றும் லாசரு
3. பார்வோன்
4. அம்மாமேடு (2சாமுவேல் 2:24)
5. சிம்சோன்
6. பிகெமோத் (யோபு 40 : 15, 23)
7. குடல் (1 இராஜா. 3:26; 2 நாளா. 21:19; ஏசாயா 16:11)
8. கோஸ் தீவு (அப்போஸ்தலர் 21:1)
9. நன்மை செய்ய (ஏசாயா 1:17)
10. பண ஆசை (1தீமோத். 6:10)

*சரியான விடை எழுதி பரிசு பெறும் நபர்களுக்கு என் வாழ்த்துக்கள்*

சகோதரி. யோகனா,
அரியலூர்.
திருமதி. ஜேன் தர்மராஜ்,
திருநெல்வேலி
சகோ. ஜோசப்,
மதுரை
திருமதி. டாரதி, சென்னை




**Honey Dew தேன் துளிகள்**
**Whats App No: 95975 55066**

dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org

**உங்களின் கனிவான கவனத்திற்கு...**

**தங்களைப் பற்றிய தகவல்களைப் புதுப்பியுங்கள்!**

*அன்பிற்குரிய பங்காளர்களே!*

உங்களைப் பற்றியப் பல புதிய தகவல்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வராமலேயே உள்ளது. எங்களிடம் உள்ள பதிவேட்டில் கூடுதல் தகவல்களைச் சேகரிக்க உள்ளோம். எனவே, தங்களைப் பற்றிய கீழ்க்காணும் தகவல்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

1. பங்காளர் பெயர் : ................................................................................
2. பங்காளர் எண் : ................................................................................
3. அலைபேசி எண் : ................................................................................
4. WhatsApp No. : ................................................................................
5. பிறந்தநாள் : ................................................................................
6. திருமண நாள் : ................................................................................
7. இ-மெயில் (e-mail) : ................................................................................
8. முழு விலாசம் (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்): ..........................................
   ................................................................................
   ................................................................................
9. பிற இன்றியமையாத தகவல்கள்: ......................................................
   ................................................................................
   ................................................................................
   ................................................................................

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் சரியாகவும், தெளிவாகவும் இ-மெயில், கடிதம், **WhatsApp No. 95004 87059** மூலமாகவும் தெரியப்படுத்தலாம். இவை உங்களை எளிதில் தொடர்பு கொள்ளவும், உங்களின் ஜெபத்தேவை அறிந்து இன்னும் ஊக்கமாய் ஜெபிக்கவும் உதவியாக இருக்கும்.

**இந்தப் பக்கத்தைக் கிழித்தோ அல்லது ஜெராக்ஸ் எடுத்தோ பூர்த்தி செய்து அனுப்பலாம்.**

# ஆவியானவர் நமக்குள் இருக்கும் போது



**தேவ செய்தி : ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு எனது இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதன் முதலாக அன்பரின் ஊழியப் பத்திரிக்கை வாயிலாக உங்களோடு தேவ வார்த்தைகளை பகிர்ந்துகொள்வதில் அதிக மகிழ்ச்சியடைகின்றேன். என்னுடைய அநேக செய்திகள், பாடல், துதி, ஆராதனைகள் யூட்யூப் (YouTube) சேனலில் வெளியிடப்பட்டுள்ளது. அநேகர் இதை பார்த்துள்ளனர், பார்த்துக் கொண்டும் வருகின்றனர். அதற்காக தேவனை துதிக்கின்றேன். இந்த நாளிலும் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும்பொழுது ஏற்படும் மாற்றங்கள் என்ன என்பதைப் பற்றியும், வேதத்திலிருந்து சில உதாரணங்களையும் கூறி உங்களை ஸ்திரப்படுத்தவே இச்செய்தியை உங்களுக்கு எழுதுகின்றேன். ஜெபத்தோடு வாசியுங்கள் நிச்சயம் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகுந்த பிரயோஜனமாக இருக்கும்.

**பரிசுத்த ஆவியானவர் நம்மை முழுமையாக ஆளுகை செய்ய ஒப்புக்கொடுக்க வேண்டும்**

உலகில் அதிகாரம் படைத்த தேசத் தலைவர்களை (President of Nation) எடுத்து கொள்வீர்கள் என்றால், ஒரு குறிப்பிட்ட தேசம் அல்லது அவர் உள்ள ராஜ்ஜியத்தை மட்டுமே அவர் ஆளுகை செய்வார். அவரது அதிகாரம் அந்த எல்லைக்குள் மாத்திரமே செயலாற்றும். மற்றபடி வேறு எந்த நாட்டையும் அவரால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், நமக்குள் இருந்து நம்மை வழி நடத்தும் பரிசுத்த ஆவியானவரால் அகில உலகத்தையும் கட்டுப்படுத்த முடியும். ஏனென்றால் சகலமும் அவரால் உண்டானது. உண்டான தொன்றும் அவரை அல்லாமல் உண்டாகவில்லை. வேதம் மிக அழகாக **"சகலமும் இயேசுகிறிஸ்துவால் உண்டானது" (ஆதி 1:31)** என்று கூறுகிறது. கர்த்தரே ஆவியானவர், வானத்திற்கு கீழேயும், பூமிக்கு மேலேயும் வல்லமையுள்ள ஒரு நாமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒரே நாமம் **"இயேசு கிறிஸ்து"** மாத்திரமே. ஆதியாகமம் முதலாம் அதிகாரம் இரண்டாம் வசனத்தை பாருங்கள் **"ஜலத்தின் மேல் ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்ன? ஆதியிலேயே ஆவியானவர் சிருஷ்டிப்பிலேயே இருக்கிறார். அதனை தொடர்ந்து பழைய ஏற்பாட்டு காலத்திலே தீர்க்கதரிசிகள் அனைவரும் அபிஷேகத்தால் நிரப்பப்பட்டார்கள். அதுமாத்திரமல்ல, புதிய ஏற்பாட்டு காலத்தில் குமாரனாகிய **"இயேசுகிறிஸ்து ஆவியானவரால் நிரப்பப்பட்டார், அப்போஸ்தலர்கள் ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள்"** என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்பொழுது நாம் வாழுகின்ற காலம், கிருபையின் காலம், கடைசி காலம். இப்போதும் அதே பரிசுத்த ஆவியானவர் உலகத்தை ஆளுகை செய்து கொண்டுதான் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் உலகை ஆளுகை செய்கின்றார் என்று சொல்கிறீர்களே அப்படி என்றால் இத்தனை அழிவுகள், கொள்ளை நோய்கள், பூமியதிர்ச்சிகள் வந்து கொண்டே இருக்கின்றதே என்று நீங்கள் கேட்கலாம். இதற்கெல்லாம் வேதத்தில் ஒரு பதில் உள்ளது. **"தீர்க்கதரிசனமானது நிறைவேற வேண்டும்".** இயேசுகிறிஸ்து லூக்கா சுவிசேஷத்தில் **"இவையெல்லாம் சம்பவிக்க வேண்டியது"** என்று சொன்னது போல இவைகள் நடக்கும்; ஆனாலும் நம்மை பலப்படுத்த, திடப்படுத்த இந்த காலத்தில் தைரியமாக முன்செல்ல, நம்மை நாம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள நமக்கு ஒரு பெலன் உண்டு. அந்த பெலன் தான் பரிசுத்த ஆவியானவர். எப்படிப்பட்ட சூழ்நிலைகள் நம்மை சுற்றி இருந்தாலும் அந்த சூழ்நிலைகளை எதிர் கொள்ளும் அனைத்து கட்டுபாடும் ஆவியானவரின் கரத்தில் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அன்பு சகோதர, சகோதரிகளே! சூறாவளி காற்று உருவாகும் இடத்தினை தொலைக் காட்சியிலோ, சமூக வலைதளங்களிலோ வரைபடமாக விஞ்ஞானிகள் வெளியிட்டதை உங்களில் அநேகர் பார்த்திருப்பீர்கள். அந்த காற்று வரும் பொழுது கடற்கரை அருகில் உள்ளவைகள், ஊர் பகுதியிலுள்ள வீடுகள், அதின் மேற்கூரைகள், எல்லாவற்றையும் தூக்கி வீசிவிடும். அந்த காற்றின் சத்தம் நமது காதை கிழிப்பது போல இருக்கும். ஆனால், அந்த புயலின் நடுவில் ஒரு அமைதி நிலவிக் கொண்டிருக்கும் என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் கூறுகின்றனர். சுழல் காற்றின் நடு மையத்தில் அதாவது Eye of the storm என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள் அங்கே ஒரு அமைதி நிலவும். இப்படி

சுற்றிக் கொண்டே வருகிற சுழல் காற்றைப் போல உள்ள நம் வாழ்க்கையில் ஏதாவது குறைவுகள், பிரச்சனைகள் வரலாம். ஆனால் சுழல் காற்றின் மையப் பகுதியை போல சுற்றிலும் ஆரவாரம் இருந்தாலும் நடுமையம் அமைதியாக இருப்பது போல நம்மை உருவாக்கின ஆவியானவர் நம்மை ஆளுகை செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும். சூறாவளிக்குள் புயலின் நடுமையம் அமைதியாக இருப்பது போல நாமும் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் கட்டுக்குள்ளாக வைத்திருப்பவர் ஆவியானவர் ஒருவரே. அந்த ஆவியானவர் இன்றைக்கு நம்முடைய வாழ்க்கையில் முழுமையாக ஆளுகை செய்ய நாம் இடம் கொடுப்போம்.

**அப்போஸ்தலர் 9:40-ல்** பார்க்கும்பொழுது அங்கே தபீத்தாள் என்னும் சீஷி மரித்து போயிருக்கிறாள். பேதுருவை அழைக்கிறார்கள், அனைவரும் அழுகிறார்கள். புதைப்பதற்கு ஆயத்த மாக பிரேதத்தை வைத்திருக்கிறார்கள். ஆனால், பேதுரு ஜெபித்தார், அங்கே பரிசுத்த ஆவியானவர் பலமாய் இறங்குகிறார். அந்த இல்லத்தை, அந்த படுக்கையை, அந்த ஸ்திரீயை பேதுருவை ஆவியானவர் ஒரு ஆளுகைக்குள் கொண்டு வருகிறார். அப்பொழுது ஒரு அற்புதம் நடக்கிறது. அந்த பெண் உயிரோடு வருகிறாள். இதுதான் முழுமையான ஆளுகை. இன்றைக்கு இந்த முழுமையான ஆளுகை நம் வாழ்வில் உள்ளதா? பேதுரு **"ஆண்டவரே உம்முடைய வல்லமையால் நிரப்பும்"** என்று ஜெபித்திருப்பார். அதேபோல இன்றைக்கு நாமும் என்னை முழுமையாக ஆளுகை செய்யும் ஆண்டவரே என்று ஜெபிப்போமா? அப்படி ஜெபிக்கும்பொழுது உங்கள் மூலமாக பலத்த அற்புதங்கள் நடக்கும். நிச்சயமாக ஆவியான தேவன் அற்புதம் செய்வார். உங்கள் வாழ்க்கையில் ஏதாவது சுகவீனங்கள் உள்ளதா? என்னை முழுமையாக ஆளுகை செய்யும் ஆண்டவரே என்று அவருக்கு உங்களை ஒப்புக் கொடுக்கும்பொழுது அவர் முழுமையாக ஆளுகை செய்வார். அப்படி ஆளுகை செய்யும்பொழுது நிச்சயமாய் ஒரு அற்புதம் நடந்தே தீரும்.

## ஆவியானவர் சர்வ வல்லவராக இருக்கிறார்

அன்பு சகோதர, சகோதரிகளே!

சர்வவல்லவர் என்று சொல்லும்பொழுது எதையும் செய்ய அவருக்கு வல்லமை உண்டு. ஆதியாகமத்திலே மனுஷனை உருவாக்கி தம்முடைய சுவாசத்தை அவன் நாசியில் ஊதினார், அவர் வரும்பொழுது ஒரு புதுசிருஷ்டிப்பு உண்டாகிறது. தேவனுடைய ஆவியே ஆவியானவர். இஸ்ரேல் ஜனங்கள் எகிப்திலிருந்து வெளியே வந்துவிட்டார்கள். அவர்களுக்கு முன்பாக செங்கடல் உள்ளது **(யாத். 14:21).** தேவன் ஒரு காற்றை அனுப்புகிறார். அங்கே அற்புதம் நடக்கிறது. ஆதியாகமத்திலே ஜலத்தின் மேல் ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார் என்று காண்கிறோம். ஜலத்தை படைத்த ஆவியான வரால் மாத்திரமே ஜலத்தை பிரிக்கவும் முடியும். இஸ்ரேல் ஜனங்களுக்கு செங்கடலை பிளந்து ஒரு வழியை உண்டாக்குகிறார். ஆவியானவர் இருக்கும் எல்லா இடங்களிலும் ஒரு விடுதலை உண்டு. **2கொரி. 3:17ல் "கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு"** என்று வாசிக்கின்றோம்.

**அப்போஸ்தலர் 16:25ல்** பவுலையும், சீலாவையும் சங்கிலிகளால் கட்டி சிறையில் போட்டு விட்டார்கள். அக்காலத்தில் மிகக் கொடூரமான தண்டனை இதுவாகும். மிகவும் கட்டுப்பாடான ஒரு சிறை. போர் வீரர்கள் பாதுகாப்பிற்காக எந்த நேரமும் இருப்பார்கள். அப்படி இருக்கும்பொழுது இந்த இரண்டு பேரும் தேவனை துதித்து பாடுகிறார்கள். அப்படி செய்யும்பொழுது அவர்கள் மத்தியில் கர்த்தர் எழுந்தருளினார். அந்த இரண்டு அப்போஸ்தலர் களின் காலில் இருந்த விலங்குகள் உடைந்தது, சிறைக் கதவுகள் திறந்தது, பூமியதிர்ச்சி ஏற்பட்டது. அங்கே ஒரு பெரிய விடுதலை. ஆவியானவர் அங்கே செயலாற்றி பவுலிற்கும், சீலாவிற்கும் விடுதலையை கொடுக்கிறார். இதற்கும் சர்வவல்லவருக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம். சிறையில் இருக்கும் அந்த இரண்டு பேரை யாராலும் விடுவிக்க முடியாது. ஆனால் ஆவியானவர் அங்கு கடந்து செல்கிறார். அவரின் வல்லமையால் ரோம வீரர்கள் மதி கலங்கி கீழே விழுந்தார்கள். சிறைகள் திறந்தன, அவர்களை கட்டிப் போட்டிருக்கின்ற சங்கிலிகள் கழன்றன. ஏனென்றால் தேவன் வல்லமை உள்ளவர். இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் எது உங்களை கட்டி போட்டுள்ளது? பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் தேவனை நோக்கி வல்லமையாக பாடித்துதித்தார்கள். அப்படி செய்தபடியால் அற்புதம் நடந்தது. அவர்களை போல நீங்களும் தேவனைத் துதியுங்கள். இதைவிட்டு விட்டு "எனக்கு வெளியே வர முடியவில்லையே, இந்த மனுஷனை பார்த்து எனக்கு பயமாக இருக்கிறதே, கடன் பிரச்சனை, அந்த பிரச்சனை, இந்த பிரச்சனை, என் பக்கத்து வீட்டுக்காரன் பிரச்சனை" என்று சோர்ந்து போய் இருக்கிறீர்களா? இன்றைக்கு எல்லா அதிகாரங்களுக்கும் அப்பாற்பட்டு ஒரு அதிகாரம் இருக்கிறது, அதுதான் ஆவியானவரின் அதிகாரம். அந்த ஆவியானவரிடம் நீங்கள் முழுமையாக வாருங்கள். ஏனெனில் அவர் ஒருவரே சர்வவல்ல வராக இருக்கிறார். **சகரியா 4:6ல்** நாம் வாசிப்பது போல **"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத் தினாலும் அல்ல கர்த்தருடைய ஆவியினாலே எல்லாம் ஆகும்".** உங்கள் மூலமாக ஆச்சரியமான

காரியங்கள் நடக்கும். யாரும் செய்ய முடியாத காரியங் களை உங்களால் செய்ய முடியும். கர்த்தருடைய ஆவியினால் பாவத்திற்கும், பரிசுத்தத்திற்கும் உள்ள வித்தியாசத்தை குழப்பமே இல்லாமல் பிரித்து பார்க்கும்படியான ஒரு தெளிவு கிடைக்கும். **ரோமர் 8:11ல்** நாம் பார்க்கிறது போல **"இயேசுவை மரித் தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக் கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்".** அன்றைக்கு கொல்கொதா மலையிலே கர்த்தர் இயேசு நமக்காக பாடுபட்டு, நொறுக்கப்பட்டு, இரத்தம் சிந்தினார். கொடிய கொடுமைகளை அனுபவித்தார். மரித்து அடக்கம் பண்ணப்பட்டார், ஆனாலும் மூன்றாம் நாள் ஆவியானவரால் உயிர்ப்பிக்கப் பட்டார். அதைத் தான் பவுல் மிகத் தெளிவாக சாவுக் கேதுவான நமது சரீரத்தை உயிர்ப்பிப்பார் என்று சொல்கிறார். உங்கள் சரீரங்களில் கொரோனா உள்ளது என்று நீங்கள் பயந்துகொண்டு இருக்கிறீர்களா? நம்முடைய சரீரத்தை மலேரியா, நிமோனியா போன்ற நோய்கள் தாக்கக் கூடியது தான், சரீரம் சாவுக்கேதுவானது தான். ஆனாலும் சாவுக் கேதுவான சரீரத்தை உயிர்ப்பிக்கிறவர் நம்முடைய ஆவியானவர் என்பதை மறவாதீர்கள்.

அன்றைக்கு மேல்வீட்டறையில் சீஷர்கள் பயந்துபோய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒன்றும் செய்ய முடியவில்லை. என்ன செய்வது? ஆனால் அங்கு பரிசுத்த ஆவியானவர் இறங்கின பொழுது அவர்கள் மூலமாக செய்யப்பட்ட அற்புதங்கள் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுக்கு தைரியம் எங்கிருந்து வந்தது? யார் யார் அவர்களை பயமுறுத்தி, தண்டனைக்கு உட்படுத்தினார்களோ, அடித்தார்களோ அவர்களுக்கு முன்பாக தைரியமாக பேசுகிறார்கள். அதுதான் ஆவியானவருடைய வல்லமை. எதையும் செய்ய முடியும். அப்படிப்பட்ட வல்லமையுள்ள ஆவியான வருக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் இருக்கிறதா? சற்று யோசித்து பாருங்கள்.

## ஆவியானவர் வரும்பொழுது முழுமையான மாற்றம் உண்டாகும்

அன்பானவர்களே! பரிசுத்த ஆவியானவர் நமக்குள் செயலாற்றும் பொழுது ஒரு முழுமையான மாற்றம் வந்தே தீரும். அவர் வரும் பொழுது குறைவானது நிறைவாகும். அதுதான் ஒரு முழுமையான மாற்றம், நம்பிக்கை நமக்குள் வருகிறது. அப்படி என்ன முழுமையான மாற்றம். பாவத்தில் நாம் மீண்டும் மீண்டும் விழாதபடிக்கு அவர் நமக்கு சுட்டிக்காட்டுவார். இது பாவம், இது தவறு, இதற்குள் நீ போகாதே என்று கூறுவார், அதிலிருந்து தப்பு விக்கப்பட உறுதுணையாக இருப்பார். பவுல் இயேசுகிறிஸ்துவை தரிசனமாக பார்க்கிறார். தமஸ்குவிற்கு சென்று உட்கார்ந்து கொண்டார். அங்கு அனனியா வருகிற வரைக்கும் அப்படியே அமைதியாக அறையில் இருக்கிறார். கண்கள் திறந்தவுடன், ஞானஸ்நானம் எடுத்துவிட்டு தைரியமாக பேசுகிறார். எந்த பட்டணத்தில் கிறிஸ்தவர்களை அடித்து நொறுக்கினாரோ, அதே பட்டணத்திற்கு போய் கிறிஸ்துவை பற்றி கூறுகிறார். இதுதான் முழுமையான மாற்றம். ஆவியானவர் வரும்பொழுது பாலைவன மாக இருக்கும் உங்கள் வாழ்க்கை சோலைவனமாக மாறும். வறண்ட நிலமாக இருந்தாலும் ஒரு பசுமையான நிலமாக மாறும். சகலமும் அவரால் உண்டானது. அன்பானவர்களே ஒரு முழுமையான மாற்றம் உங்களுக்கு வேண்டுமா? ஒவ்வொரு முறையும் பாவத்தில் விழுந்து விழுந்து மனந்திரும்பி கொண்டு இருக்கிறீர்களா? அது ஒரு சாதாரண கிறிஸ்தவ வாழ்க்கை. அப்படி ஒருபோதும் நீங்கள் இருக்கக் கூடாது. நேபுகாத்நேச்சார் என்னும் அரசன் **"பரிசுத்த தேவர்களின் ஆவியை பெற்ற தானியேல்"** என்று கூறுகிறான். **(தானியேல் 4:8).**

ஆம்! ஆவியானவர் நமக்குள் இருக்கும் பொழுது புறஜாதிகள் உங்களை பிரித்து பார்ப்பார்கள். அது மிக ஆச்சரியமாக இருக்கும். இந்த மகனுக்குள், மகளுக்குள் ஒரு வல்லமை இருக்கிறது, அது சர்வ வல்லமையுள்ளதாக இருக்கிறது, அவன் நல்லவன், அவள் நல்லவள் என்று கூறுவார்கள். இப்படிப்பட்ட ஒரு மாற்றம் ஆவியானவரால் நமக்கு கிடைக்கும். பாவம் நம்மை சுற்றி உலாவும் இந்த காலக்கட்டத்தில் ஆவியானவர் நமக்குள் இருந்தால் தான் பாவத்திற்குள் நாம் மீண்டும் மீண்டும் விழ மாட்டோம். நம்மால் வியாதிகளை மேற்கொள்ள முடியும். தைரியம் நமக்குக் கிடைக்கும். இன்றைக்கு நம் வாழ்க்கையை அந்த தேவனிடம் முழுமையாக ஒப்புக் கொடுப் போமா?

கடைசியாக, உங்களுக்குள் ஒரு சிறு சந்தேகம் வரலாம். நான் தான் நன்றாக ஜெபிக்கிறேனே, கர்த்தரோடு நடக்கிறேனே என்று சொல்வீர்கள் என்றால் நான் உங்களுக்கு சொல்கிறேன். **"அவர் தம்முடைய ஆவியை நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத் திருக்கிறதை அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 4:13)** ஆம் பரிசுத்த ஆவியானவர் நம்மில் இருக்கும் பொழுது தான் நாம் அவரில் நிலைத்திருக்க முடியும். எவ்வளவு பெரிய பாக்கியம். அவர் நமக்குள் இருக்கும்பொழுது மாத்திரமே நான் மேலே கூறின சகல காரியங்களும் நம் வாழ்க்கையில் தானாகவே நடக்கும். அதைத்தான் சீஷன் யோவான் மிக அழகாக **1 யோவான் 4:13-ல** அழகாக சொல்கிறார். அவரோடு இணைந்திருங்கள், வல்லமையான காரியங்களை அவர் உங்கள் வாழ்க்கையில் செய்வார். சகலத்திலும் உங்களால் ஒரு கட்டுபாட்டை வைத்துக்கொள்ள முடியும். முழுமையான மாற்றம் உங்களுக்குள் நிச்சயமாக இருக்கும். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

## தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் அவர்கள் குடும்பத்தினரை
சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள்
கீழ்க்கண்ட அலைபேசியில் முன் அனுமதி பெற்று வருமாறு
கேட்டுக் கொள்கின்றோம்.

செல் : 80987 42638 & 94888 45627

**பார்க்க தவறாதீர்கள்**

திரு.ஜோனத்தன் மோசஸ் அவர்கள் பாடிய **புதிய பாடல்**

திருமதி மார்கிரேட் ஸ்திரா அவர்களின் **புதிய பாடல்** விரைவில் ...

நமது Youtube Channel–ல்

**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**

Ministry of Jesus - Dr. Ananda Stira
Dr Jane Joshua
My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in
Ananda Stira @dranandastira
Margretstira
Jane Joshua @DrJaneJoshua
My Deliverance Church @mydeliverance.church
Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

ministryofjesus.in

drjane15

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 7 | இதழ் : 7 | ஜூலை 2021 | தனிபிரதி – ரூ. 20/– | ஆண்டு சந்தா ரூ 200/–
VOL:7 | Issue No:7 | July 2021 | Single Copy - Rs 20/- | ANNUAL SUBSCRIPTION : RS 200/-

